[திரு. கே.என். நேரு] [2008 ஏப்ரல் 30

கேட்டுக்கொண்டதைப்போல, தமிழ்நாடு அரசு சார்பாக யார் யாரெல்லாம் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்ற அரசு ஆணையை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேசையிலே அதை வைக்கிறேன். பார்த்துக்கொள்ளுங்கள். யார் யாரெல்லாம் சிவப்பு விளக்கைப் போட்டுக்கொண்டு போகக்கூடாதோ, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் இந்தச் சபையின் மூலமாக இப்போது நீங்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நடவடிக்கை எடுத்து, வைக்கக்கூடாதவர்கள் வைக்காத அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(ஆ) வேளாண் பட்டம்/பட்டயம் பெற்றவர்களின் வேலைவாய்ப்பிற்கு வயது வரம்பைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், என்ன?

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிவிப்பிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, வேளாண்மைத் துறையில் பட்டம் படித்தவர்களுக்கும், டிப்ளோமா படித்தவர்களுக்கும் 1,707 பேர்களுக்கு 18 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, வேலை நியமன உத்தரவு விரைவிலே வழங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள். 18 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, அந்த வேலை நியமன உத்தரவு வழங்கப்படும் என்ற அறிவிப்பு வந்த காரணத்தினால், அந்த வேளாண்மைப் பட்டப் படிப்புப் படித்தவர்களுக்கு வயது முதிர்ந்து இருக்கிறது; அவர்கள் அந்த வயது வரம்பைத் தளர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், P & AR துறையின் பொறுப்பு வகிக்கின்ற மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும், மற்றவர்களுக்கு முன் உதாரணமாக இருப்பதைப்போல் அந்த வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு, அதற்கான வயது வரம்பைத் தளர்த்தி அரசு ஆணை வெளியிட்டு, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2008 ஏப்ரல் 30]

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.எஸ்.சி., (அக்ரி.) பட்டப் படிப்புப் படித்தவர்களுக்கு வயது வரம்பு கிடையாது. டிப்ளோமா (அக்ரி.) படித்தவர்களுக்கு வயது வரம்பு உண்டு. கடந்த ஆட்சியில், ஐந்து ஆண்டுக் காலம் பணி நியமனத் தடைச் சட்டம் இருந்த காரணத்தினால், அவர்களுக்கு வயது வரம்பு கடந்துவிட்டது என்று, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வயது வரம்பு கடந்துவிட்டது; ஐந்து ஆண்டுக் காலம் அவர்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது என்று, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30 வயதிலிருந்து 35 வயதாகவும், தாழ்த்தப்பட்ட எஸ்.டி. வகுப்பின மக்களுக்கு 35-லிருந்து 40 வயதாகவும் உயர்த்தி அவர்களுக்குப் பணி நியமன வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால், இப்போதுதான் அவர்களை 18 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு நாம் நியமனம் செய்கிறோம்.

ஆகவே, அவர்களுக்கு ஒரு 10 ஆண்டுக் காலம் நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. அது வேளாண்மைத் துறையின்மூலம் பரிசீலனை செய்து 10 ஆண்டுக் காலம் இல்லாவிட்டாலும், ஏற்கெனவே ஆதி திராவிட, மலைவாழ் மக்களுக்கு 40 வயது இருப்பதைப்போல, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 35 வயதிலிருந்து 40 வயது வரை கொடுத்தாலும்கூட அவர்களில் சில பேர் பணியிலே சேரக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும் என்று கோப்பு அனுப்பப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பார்வையிட்டு, ஏற்கெனவே 5 வருடம் நாம் வாய்ப்பு அளித்திருக்கின்றோம், அதற்கு மேல் வழங்குவது சாத்தியம் இல்லை என்று முடிவு செய்திருக்கின்றார்கள். இருந்தாலும், முதலமைச்சரிடத்திலே மீண்டும் பேச இருக்கிறேன்.

முற்பகல் 10-50

(இ) மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் சேதுராமன் அவர்களை விடுதலை செய்யக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் தேவர் மக்களின் பல்வேறு